வலயக்கல்வி அலுவலகம் - வடமராட்சி


இரண்டாந் தவணைப் பரீட்சை - 2019

கணிதம்

தரம் : 06 **நேரம் : 2 மணி**

பகுதி - I

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

01. 

தரப்பட்டுள்ள உருவில் வட்டத்தின் மீதுள்ள புள்ளிகளை எழுதுக.

02. 360 000 இனை வாசிக்கும் முறையை எழுதுக.

03. மூன்று மில்லியன் மூன்று என்பதனை இலக்கத்தில் எழுதுக.

04. மு.ப. 12.25 எனும் நேரத்தை சர்வதேச நியமமுறையில் எழுதுக.

05. 240 நிமிடத்தை மணித்தியாலத்தில் தருக.

06. $p = 3$, $q = (-2)$ என்பவற்றை எண்கோட்டில் குறித்துக் காட்டுக.

07. $<$, $>$ என்ற குறியீடுகளைப் பயன்படுத்தி இடைவெளிகளில் பொருத்தமான குறியீட்டை இடுக.
i) 2 ____ (-3) ii) (-3) ____ (-1)

08. 56 ஐ கிட்டிய பத்திற்கு மட்டந்தட்டுக.

09. சதுரக் கூட்டினுள் பொருத்தமான இலக்கத்தை இடுக.

$$\frac{2}{3} = \frac{4}{\square} = \frac{\square}{12}$$

10. 1, 2, 3, 4, 5, 7 என்ற எண்களைப் பொருத்தமான பண்புகளுக்கேற்ப கூட்டமாக்குக.




11. 10 இன் அனைத்துக் காரணிகளையும் எழுதுக.

www.lkedu.lk

12. செவ்வகத்தின் பண்புகள் 2 தருக.

13. $\frac{3}{100}$ இனை தசமமாக எழுதுக.

14. நான்காவது முக்கோண எண்ணையும் 5வது முக்கோண எண்ணையும் கூட்ட கிடைப்பது எத்தனையாவது சதுர எண்?

15.

	km	m
	7	30
+	2	80

16. 3070 ml ஐ லீற்றர் மில்லிலீற்றரில் எழுதுக.

17.

	l	ml
	3	300
-	1	700

18. 7, 5, 6, 2 ஆகிய இலக்கங்களை ஒரு தடவை மாத்திரம் பயன்படுத்தி எழுதக்கூடிய மிகச் சிறிய எண் யாது?

19. 13 இன் 5ஆவது மடங்கு யாது?

20. இரு கைகளையும் பக்கமாக நீட்டியவாறு சூரியன் உதிக்கும் திசையை நோக்கி நிற்கும் மாணவன் ஒருவனது இடதுகை காட்டும் திசை யாது?


(20 x 2 = 40 புள்ளிகள்)

www.lkedu.lk

பகுதி - II

முதலாம் வினா உட்பட மொத்தமாக 5 வினாக்களுக்கு விடை தருக.

01. *a)* எண்கோலம் தொடர்பான அலகில் ஆசிரியரால் போத்தல் மூடிகளைக் கொண்டு அமைக்கப் பட்ட கோலம் பின்வருமாறு.



.....

i) இவ்வாறு அமைக்கப்படும் கோலத்தை உடைய எண்களை எவ்வாறு அழைக்கலாம்?

(1 புள்ளி)

ii) ஆறாவது கோலத்தை அமைப்பதற்கு எத்தனை போத்தல் மூடிகள் தேவை?

(2 புள்ளிகள்)

iii) முக்கோண வடிவில் அமைக்கப்பட்ட ஒரு கோலத்தில் இறுதி வரிசையில் 10 போத்தல் மூடிகள் ஒட்டப்பட்டிருந்தால் அவ்வடிவில் எத்தனை மூடிகள் மொத்தமாக இருக்கும்?

(2 புள்ளிகள்)

iv) முதல் ஆறு வரையான முக்கோண கோலத்தில் மொத்தமாக எத்தனை போத்தல் மூடிகள் பயன்படுத்தப்பட்டிருக்கும்?

(3 புள்ளிகள்)

b) 1 தொடக்கம் 20 வரை எழுதப்பட்ட எண் அட்டைகளைக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

i) சதுர எண்களைத் தெரிந்து எழுதுக.

(2 புள்ளிகள்)

ii) முதல் நான்கு சேர்த்தி எண்களைத் தெரிந்து எழுதுக.

(2 புள்ளிகள்)


iii) மிகச்சிறிய முதன்மை எண் யாது?

(2 புள்ளிகள்)

iv) 1 தொடக்கம் 10 வரை உள்ள ஒற்றை எண்களைக் கூட்டும்போது எத்தனையாவது சதுர எண் கிடைக்கும்?

(2 புள்ளிகள்)

02. *a)*



உருவில் உள்ள தகவல்களுக்கேற்ப சரிவகத்தின் சுற்றளவைக் காண்க.

(3 புள்ளிகள்)

b) செவ்வகம் ஒன்றின் நீளம் 17 cm உம் அதன் சுற்றளவு 50 cm உம் ஆயின் அதன் அகலம் யாது?

(3 புள்ளிகள்)

c) பின்வரும் நீளங்களை மீற்றரில் (m) தருக.

i) 4 km *(1 புள்ளி)*

ii) 1560 cm *(2 புள்ளிகள்)*

iii) 4 m 65 cm *(2 புள்ளிகள்)*

www.lkedu.lk

03. a) சுருக்குக.

i) 2579 + 468 (2 புள்ளிகள்)

ii) 5800 - 968 (2 புள்ளிகள்)

b) ஒரு மூடை சீனியின் விலை ரூ. 4850 எனின் 58 சீனி மூடைகளின் விலை யாது?


(3 புள்ளிகள்)

c) வகுக்குக.

i) 2520 ÷ 24 ii) 18000 ÷ 100

(2 x 2 = 4 புள்ளிகள்)

04. a) கீழே உள்ள உருவில் இலக்கங்களினால் குறிக்கப்பட்டுள்ள கோணங்களின் வகைகளை எழுதுக.



கோண வகைகளைத் தருக.

1 -

2 -

3 -

4 -

(4 புள்ளிகள்)

b) கடிகாரத்தில் 3.00 மணியாக இருக்கும்போது நிமிட முள்ளுக்கும் மணி முள்ளுக்கும் இடைப்பட்ட கோண வகைகளை எழுதுக.

(2 புள்ளிகள்)

c)

தபாலகம்	பாடசாலை	கோயில்
புகையிரதம்	வீடு	சந்தை
பொலிஸ்நிலையம்	குளம்	வயல்

i) வீட்டுக்கு வடகிழக்குத் திசையில் அமைந்துள்ளது எது?

(2 புள்ளிகள்)

ii) பாடசாலைக்குத் தென்கிழக்குத் திசையில் அமைந்துள்ளது எது?

(2 புள்ளிகள்)

iii) குளத்திற்கு எத்திசையில் வயல் அமைந்துள்ளது?

(1 புள்ளி)

05. a) > , < அல்லது = குறியீடுகளைப் பயன்படுத்தி இடைவெளிகளை நிரப்புக.

i) $\frac{7}{17} ____ \frac{5}{17}$ (1 புள்ளி)

ii) $\frac{3}{4} ____ \frac{12}{16}$ (2 புள்ளிகள்)

www.ikedu.lk

b) சுருக்குக.

i) $\frac{3}{5}+\frac{1}{5}$ (1 புள்ளி)

ii) $\frac{9}{13}-\frac{5}{13}$ (1 புள்ளி)

c) பெறுமானம் காண்க.

i) $\frac{5}{12}-\frac{1}{3}$ (3 புள்ளிகள்)

ii) வாசுகி புத்தகமொன்றின் $\frac{1}{2}$ பங்கைத் திங்கள் கிழமையும் $\frac{1}{3}$ பங்கை செவ்வாய்க் கிழமையும் வாசித்து முடித்தாள். இரு நாட்களும் சேர்த்து என்ன பங்கை வாசித்து முடித்தாள்?

(3 புள்ளிகள்)

06. a) 25.71 இனைச் சொற்களில் எழுதுக.

(2 புள்ளிகள்)

b) 3.28 என்ற எண்ணில் 8 வகைக்குறிக்கும் பெறுமானம் யாது?

(2 புள்ளிகள்)

c) கூட்டுக. 1.82 + 12.3

(2 புள்ளிகள்)

d) கழிக்குக. 14.32 - 4.93

(2 புள்ளிகள்)

e) ஏறுவரிசைப்படுத்துக.
2.3, 2.13, 3.2, 2.25

(3 புள்ளிகள்)

www.lkedu.lk